*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
*CC.No. 08/2025 – P.W. 1 (LW1)*

| | |
|---|---|
| *Name* | பூமிநாதன் |
| *Father's Name* | காளி |
| *Village* | கோவில்சித்தமல்லி |
| *Age* | 61 |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.08.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி விஸ்வநாதனை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர் தான். கடந்த 27.09.2024 ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் சித்தமல்லி கடைத்தெருவில் சென்றுகொண்டிருந்தபோது அங்குள்ள பிள்ளையார் கோவில் அருகில் சென்று கொண்டிருந்தபோது எதிரி கையில் அரிவாளை வைத்துக் கொண்டு உன்னையும், ரமேஷ் என்பவரையும் வெட்டிவிடுவேன் என்றும், என் குடும்பத்தையும், ரமேஷ் குடும்பத்தையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். எதிரி புண்டாமவனே என்று ரமேஷையும் என்னையும் வெட்டிவிடுவேன் என்று என்னை மிரட்டினார். நான் பயந்து கொண்டு ஓடினேன். எதிரி மது அருந்தியிருந்ததால் என்னை வெட்டிவிடுவார் என்று பயந்து ஓடினேன். என்னை பின்தொடர்ந்து தொரத்திக் கொண்டு வந்தார். இதை கடைத்தெருவில் உள்ள அனைவரும் பார்த்தார்கள்.

2. நான் காவல் நிலையம் சென்ற பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம்இந்நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான்கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னடையது தான். (**புகார் மனு அ.சா.ஆ.-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் Old SSLC படித்துள்ளேன். காவல் நிலையத்தில் நான் சம்பவம் குறித்து சொல்ல ஏட்டையா எழுதினார். சம்பவத்தை சுமார் 100 நபர்களுக்கு மேல் பார்திருப்பார்கள் என்றால்-சரிதான். வீரக்குமார், அன்பழகன் ஆகியோர்கள் எனது உறவினர்கள் அல்ல. வீரக்குமார், அன்பழகன் ஆகியோர் எனது உறவினர் கள் என்றும் தற்போது வழக்கிற்காக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன்-என்றால் சரியல்ல.

2. நான் இந்த புகாரில் குறிப்பிட்டுள்ள ரமேஷ் என்பவர் மிகப்பெரிய தலைவர் என்றாலும், தற்போது அவர் தேசிய அரசியல் கட்சியின் தலைவராக உள்ளார் என்றால்-சரிதான். அவர் தற்போது குடும்பத்துடம் சிதம்பரத்தில் தொழில் செய்து வருகிறார் என்றால்-சரிதான். அவர் தற்பொழுது எங்கள் ஊரிலுள்ள பெரும்பாண்மையான நபர்களை அவர் சார்ந்துள்ள கட்சிக்கு மாற்றிவிட்டார் என்றால்-சரிதான்.

3. எதிரி விஸ்வநாதன் தற்போதுள்ள ஆளுங்கட்சியில் உறுப்பினராக இருந்து வருகிறார் என்றால்-சரியல்ல. அரசியல் ரீதியாக எதிரிக்கும், ரமேஷ் என்பவருக்கும் இடையே பிரச்சனை இருந்ததா என்றால்-இருந்திருக்கலாம். நான் சொல்வது சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் சொல்வது போல உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் கடைத்தெருவில் தொழில் செய்து வருகின்ற நபர்களை சாட்சியாக விசாரித்திருப்பார்கள் என்றால்-அதுபற்றி எனக்கு தெரியாது.

4. நடந்த சம்பவம் குறித்து சிதம்பரத்தில் உள்ள ரமேஷ் என்பவருக்கு போன் செய்தபோது காவல் ஆய்வாளரிடம் சொல்லிவிட்டதாக கூறி என்னை அனுப்பி வைத்தார் என்றால்-சரிதான். நான் அங்கு சென்றபோது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றாலும்-சரிதான்.

5. நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் ரமேஷ் என்பவருக்கும் இடையே உள்ள பிரச்சனைக்காக என்னை பயன்படுத்தி இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால்-சரிதான்.

ஒம்/- திருமதி.ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***

***CC.No. 08/2025 – P.W.2 (LW3)***

| | |
|---|---|
| *Name* | அன்பழகன் |
| *Father/Husband's Name* | பாலுச்சாமி |
| *Village* | கோவில்சித்தமல்லி |
| *Age* | *46* |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.08.205*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி விஸ்வநாதன், அ.சா-1 பூமிநாதன், சாட்சி வீரக்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 1 வருடம் முன்பாக தேதி, மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் மாலை சுமார் 06.00 மணியளவில் நான் சித்தமல்லி கடைத்தெருவில் உள்ள எனது வீட்டின் எதிர்புறம் உள்ள கடையில் இருந்தபோது, போலிசார் வந்து படம் வரைந்து கொண்டார்கள். எதற்காக படம் வரைந்தார்கள் என்றால் முதல் நாள் ஏதோ பிரச்சனை நடந்ததாக போலிசார் என்னிடம் சொன்னார்கள். நானும், பக்கத்தில் மளிகை கடை நடத்தி வரும் வீரக்குமார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். (**பார்வை மகசர் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னிடம் டைப் செய்து எடுத்து வந்த பேப்பரில் தான் கையொப்பம் வாங்கினார்கள். என் முன்னிலையில் எழுதியோ அல்லது டைப்செய்தோ கையொப்பம் வாங்கப்படவில்லை என்றால்-சரிதான்.

ஒம்/- திருமதி.ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.